සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

வයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**

**33 T I**

පළමු වාර පරීක්ෂණය - 11 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 11 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2018

**சுட்டிலக்கம் .........................................** **வரலாறு I** **நேரம் : 1 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **மிகச்சரியான விடையின் கீழ் கீறிடுக**

1. கி.பி 5ம் நூற்றாண்டில் மகாநாம தேரரால் திக்சந்த செனவியா பிரிவெனாவில் எழுதப்படட இலக்கிய நூல் எது?
 1. தீபவம்சம் 2. சூழவம்சம் 3. வம்சத்தப்பகாசினி 4. மகாவம்சம்

2. கம்பளை முதல் கோட்டே வரையிலான காலப்பகுயில் இந்நாட்டு அரசியல் வரலாற்றை உள்ளடக்கி எழுதப்பட்ட இலக்கிய மூலதாரம் பின்வருவனவற்றுள் எது?
 1. ராஜவலிய 2. நிக்காப சங்கிரகய 3. பூஜாவலிய 4. ராஜவலிய

3. பின்வரும் வெள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களுள் உரோம இலக்கிய மூலாதாரத்தினைத் தெரிவு செய்க.
 1. மெகந்தனீஸின் இந்திகா 2. ரொபர்ட்நொக்ஸின் எதா ஹெல திவ
 3. பிளினியின் நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா 4. பாகிய தேரரின் தேச சஞ்சார அறிக்கை.

4. வரலாற்றைக்கற்கும் போது தொல்பொருள் மூலாதாரமான நாணயங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியாத விடயம் யாது?
 1. புராதன வர்த்தகம் பற்றிய தகவலை அறியலாம்.
 2. புராதன நாணயப் பாவனை பற்றிய தகவலை அறியலாம்.
 3. தொடர்ச்சியான அரசியல் வரலாற்றை அறியலாம்.
 4. பண்டைய கால மக்களின் பொருளாதார நிலையை அறியலாம்.

5. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வரட்சியான காலநிலை நிலவும் காலப்பகுயில் திறந்த வெளியிலும் மழைவீழ்ச்சி அதிகரித்த காலப்பகுதியில் கற்குகைகளிலும் வசித்து வந்தனர். இதனடிப்படையில் மலையகப் பிரதேச வெட்டவெளி வேட்டை நிலப்பிரதேசம் பின்வருவனவற்றுள் எது?
 1. புந்தல 2. பொதான 3. அலிகல 4. ஹோர்ட்டன் சமவெளி

6. பண்டைய காலத்தில் பெரிய நகரக்குடியேற்றங்களைக் குறிப்பிட 'புரம்' எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. 1ம் விஜயபாகு மன்னன் பனாகடுவ செப்பு சாசனத்தில் 'துருபுரம்' எனும் சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ள குடியேற்றம் பின்வருவனவற்றுள் எது?
 1. பொலன்னறுவை 2. அநுராதபுரம் 3. தம்பதெனிய 4. கோட்டே

7. பத்துக் கிராமங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வண்ணம் அதன் தலைவர்கள் ஒன்று கூடி பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கிமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு யாது?
 1. கஞுதிய பொகுண கல்வெட்டு 2. கொக்கல்கந்த கல்வெட்டு
 3. கொரவக்கல் கல்வெட்டு 4. கல்பொத்த கல்வெட்டு

8. அருகிலுள்ள உருவில் முன்வரலாற்றுக்கால பருமக முதலிய பிரபுக்களால் கி.மு 700 - 450 காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட கல்லறை மயானம் காட்டப்பட்டுள்ளது. இது எப்பெயரால் அழைக்கப்படும்?



 1. கல்சொஹன் மயானம்
 2. இப்பன்கடுவ மயானம்
 3. யடிகல்பொத்த மயானம்
 4. ஹல்துமுல்ல மயானம்

9. கமிகமார்கள் கிராமத்து இல்லத் தலைவர்களிலிருந்தே தெரிவு செய்யப்படுவர் என புத்தகோசதேரர் குறிப்பிட்ட இலக்கிய நூல் யாது?
 1. சமந்த பாசாதிகா 2. மகாவம்சம் 3. ரசவாஹினி 4. பெரகும்பா சிரித

10. மகாவம்சத்தில், ஒரு குளத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியேற்றம் எவ்வாறு குறிப்பிடப்பட்டது?
 1. மணிகாரகாம 2. கோபாலகாம 3. கும்பகாரகாம 4. ஹுூந்தரி வாபிகாம



kalvi.lk

11. சர்வதேச வர்த்தகமானது இந்து சமுத்திரத்தில் கிழக்குப் பிரதேசத்திற்கு மாற்றப்பட்டதனால் 1ம் விஜயபாகு மன்னன் அதன் நன்மைகளை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்கப் பயன்படுத்திய துறைமுகம் யாது?
1. மகாதித்த 2. சூகரதித்த 3. கோகர்ண 4. பல்லவங்க

12. பண்டைய சமூகத்தில் இரத்தினக்கல் அகழ்வோரைக் குறிப்பிடக் கல்வெட்டுக்களில் பயன்படுத்திய சொல் எது?
1. துலாதார 2. தமகர 3. வணிஜ 4. மணிகர

13. கி.பி 11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் இந்நாட்டில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக வந்த தென்னிந்திய வர்த்தகர்களின் தீர்வை நிலையம் அல்லாதது யாது?
1.நாணாதேதி 2. காம்போஜ மகா புகிய 3. வலஞ்சியர் 4. ஐங்குறுவர்.

14. பண்டைய சமூகத்தில் பிக்குமார்களுக்கு மழைக்காலத்தில் தங்கியிருக்க அழைப்பு விடுப்பதும் அக்காலம் முடிவடைய கட்டின விழா எடுப்பதும் பௌத்தர்களிடையே காணப்பட்ட மரியாதைக்குரிய வழக்கமாகும். இங்கு மழை காலத்தில் பாதுகாப்பாக தங்கியிருத்தல் என்பதற்கு வழங்கப்பட்ட சொல் யாது?
1. வசவசிக 2. யுத்தபாணக 3. சகிவிஹகரிய 4. தீக பாணக.

15. புராதன சமூகத்தில் இனங்களுக்கிடையே இணக்கப்பாடு காணப்பட்டமைக்கு எடுத்துக்காட்டாக பொலன்னறுவை ஆட்சிக்காலத்தில் தலதாமாளிகையின் பாதுகாப்பை வேலைக்காரப் படையினரிடம் ஒப்படைத்த மன்னன் யார்?
1. புதல்னா
2. 1ம் விஜயபாகு
3. 2ம் பராக்கிரமபாகு
4. கீர்த்தி ஸ்ரீ நிஸங்கமல்ல மன்னன்

16. எமது நாட்டை ஆண்ட மன்னர்கள் தமது அயல் நாடுகளைப் போலவே தூர நாடுகளுடனும் நட்புறவுத் தொடர்புகளை வைத்திருந்தனர். அவ்வாறான சந்தர்ப்பமொன்றைத் தெரிவு செய்க.
1. பொது வசதிகளை வழங்குவதற்காக வெஜ்ஜசாலா எனும் வைத்தியசாலை நிறுவப்படல்.
2. காய்ச்சல் நோயாளிகளுக்கு உபசக்கரோகநாச எனும் பெயரில் தனியார் வைத்தியசாலையொன்றை நிறுவுதல்
3. 1ம் கஜபாகு மன்னன் பத்தினி தெய்வக்கோயில் ஒன்றின் திறப்பு விழாவொன்றிற்கு தென்னிந்தியாவில் சேர இராச்சியத்துக்குச் செல்லல்.
4. 1ம் உபதிஸ்ஸ மன்னன் கர்ப்பிணித்தாய்மார்களின் பிரசவத்திற்காக பஸவந்திநாமசால எனும் விடுதியைக் கட்டுதல்.

17. கீழே முற்காலத்தில் எமது நட்டில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தினரை நிரல் i லும் அவர்களின் தாய் நாட்டை நிரல் ii லும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| 1. தமிழர்கள் | A மலாயா குடாநாடு |
| 2. அயோனியர்கள் | B ஆப்கானிஸ்தான் |
| 3. ஜாவகர்கள் | C இந்தியா |
| | E மெஸிடோனியா |

மேலே நிரல் i னை நிரல் ii உடன் இணைக்கும் போது பெறப்படும் சரியான விடை யாது?
1. A, C, E 2. C, B, D 3. D, E, A 4. E, B, D

18. பண்டைய மக்கள் குளத்திலிருந்து நீரைப்பாதுகாப்பான முறையில் வெளியேற்றுவதற்கு விசாலமான கற்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட வியூகம் எவ்வாறு அழைக்கப்படும்?
1.கலிங்கல் தொட்டி 2. மடைக்கதவு 3. அலை தாங்கி 4. கலிங்கல்

19. பண்டைய மக்கள் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்திய முறைகள் மூன்றினை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
A - லாஹ B - கவ்வ C - ஆங்குல
D - யொதுன E - அக்க F - உசக
1. A, C, F 2. B, E, F 3. B, E, E 4. B, D, F

20. புராதன காலத்தில் 'வஜ்ரசும்பட்ட' எனும் உபகரணம் பொருத்தப்பட்டிருந்த தூபி யாது?
1. தூபாராம 2. மிரிசவெட்டிய 3. ருவன்வெலிசாயா 4. சூதிகர சைத்திய.

21. புராதன காலத்தில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிடப்பட்ட முக்கிய வரிகள் சில பின்வருமாறு,
A தக்கபதி B போஜகபதி C மதரமஞ்சக்க
D உள்நாட்டுத்தண்டப்பணம் E எண்ணெய் வரி

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவைகளிலிருந்து வாய்க்காலில் மீன் பிடித்தல், குளங்களில் நீரைப் பயன்படுத்தல், போயா தினங்களில் வியாபாரம் செய்தல் போன்றவற்றுக்கு அறவிடப்பட்ட வரிகளை முறையே தெரிவு செய்க.
1. C, A, E 2. D, A, B 3. C, A, B 4. D, C, B



kalvi.lk

22. கி.பி. 19 ம் நூற்றாண்டில் வரையப்பட்டதும் சுவையான உணவை உட்கொள்ளும் பிரிவினரையும் கொண்ட இவ்வுருப்படம் காணப்படும் இடம் யாது?
   1. முல்கிரிகல விகாரை
   2. களனி விகாரை
   3. சீகிரியா
   4. தம்புள்ள விகாரை



23. கி.பி 12 ம் நூற்றாண்டளவில் செல்வந்தர்கள் மத்தியில் விருப்பமான உணவு என சத்தர்ம ரத்னாவலிய எனும் நூலில் குறிப்பிடப்பட்ட உணவுத்தொகுதி யாது?
   1. காட்டுகிழங்கும் வற்றாளைக்கிழங்கும்
   2. தவிடுடனான அரிசியால் சமைக்கப்பட்ட சோறும் நெய்யில் சுடப்பட்ட மான் இறைச்சியும்
   3. தீட்டாத அரிசிச் சோறும் காடிப்புளியும்
   4. யவாகு கஞ்சியும், அபுஹம்பு காடியும்

- பின்வரும் வரலாற்று நிகழ்வுகளைப் பயன்படுத்தி 24, 25ம் வினாக்களுக்கு விடை தருக.
  - A - கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு
  - B - சபுமல்குமாரனின் தலைமையில் படையொன்றை அனுப்பி யாழ்ப்பாண இராச்சியத்தை வெற்றி கொள்ளல்
  - C - பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்தைத் திட்டமிட்ட நகராக்குதல்.
  - D - பெலிகலையில் தளதா மாளிகையைக்கட்டி புனித சின்னங்களை வைத்து பிரதிஷ்டை செய்தல்

24. மேற்குறிப்பிடப்பட்ட வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை யாது?
   1. A, B, D, C  2. B, C, A, D  3. D, C, B, A  4. C, A, D, B

25. B எனும் நிகழ்வுடன் தொடர்புபட்ட மன்னன் யார்?
   1. 1ம் பராக்கிரமபாகு  2. 2ம் பராக்கிரமபாகு  3. 4ம் பராக்கிரமபாகு  4. 6ம் பராக்கிரமபாகு

- பின்வரும் அட்டவணை A-F வரையான தகவல்களை உள்ளடக்கியுள்ளன. இதனைப்பயன்படுத்தி 26, 27ம் வினாக்களுக்கு விடையளிக்க.

| ஆண்டு | போர்த்துக்கேய தளபதி | மலைநாட்டு மன்னர்கள் |
|---|---|---|
| A - 1594 | C- தியோகதமெல்லோ | E- 1ம் விமலதர்மசூரியன் |
| B - 1638 | D- போரோ லோபென்ஸ்த சூசா | F- 2ம் இராஜசிங்க மன்னன் |

26. தந்துரே போருடன் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொண்ட விடை யாது?
   1. A, C, E  2. B, C, F  3. A, D, E  4. B, D, E

27. கன்னொருவப் போருடன் சம்பந்தப்பட்ட தகவல்களை கொண்ட விடையைத் தெரிவு செய்க
   1. C, B, F  2. B, C, F  3. A, C, F  4. B, D, E

28. கி.பி 1664 ம் ஆண்டு பிரான்ஸியர் இந்தியாவில் ஆரம்பித்த வர்த்தக நிலையம் அல்லாதது எது?
   1. பாண்டியச்சேரி  2. கல்கத்தா  3. காரைக்கால்  4. சந்திரநகர்

29. கி.பி 1815 ஆண்டு கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமாவதற்கு முக்கிய காரணி ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னனின் பலவீனமேயாகும் இதனோடு தொடர்பற்ற காரணியைத் தெரிவு செய்க.
   1. ஜோன் டொயிலியின் தந்திரோபாய செயற்பாடு.
   2. கண்டிப் பிரதானிகளுக்கிடையே மோதல்கள் ஏற்பட்டமை.
   3. எகலப்பொலவின் குடும்பத்தினருக்கு மரண தண்டனை வழங்கியமை.
   4. மன்னனுக்கும் பொதுமக்களுக்குமிடையில் தொடர்புகள் விலகிச் செல்லல்.

30. கி.பி. 1848 சுதந்திரக் கிளர்ச்சிக்கான உடனடிக் காரணம் யாது?
   1. பிரித்தானியரின் நிலக்கொள்கை.
   2. கிராம சபைகள் செயலற்றுப் போதல்.
   3. அரசுக்கும் பொதுமக்களுக்குமிடையிலான தொடர்பு விலகிச் செல்லல்.
   4. பிரித்தானிய அரசின் புதிய வரிக்கொள்கை.

31. கி.பி 1848 ம் ஆண்டுக் கிளர்ச்சி தோல்வியடைந்தமைக்கான காரணியல்லாதது பின்வருவனவற்றுள் எது?
   1. இப்போராட்டம் ஒழுங்கு முறையாக திட்டமிடப்படாமை.
   2. முறையான படைப்பயிற்சியும் ஆயுதங்களும் காணப்பட்டமை.
   3. மலைநாட்டு வீதிகள் தொடர்பாக ஆங்கிலேயருக்கு போதிய அறிவு இருந்தமை.
   4. பிரித்தானிய படைப்பலத்திற்கும் ஆயுதப்பலத்துக்கும் எதிராக போராட முடியாமை.



kalvi.lk

- பின்வரும் A, B எனும் தகவல்களுக்கு அமைய 32, 33 ம் வினாக்களுக்கு விடையளிக்க

A - தாந்தே B - ஜோன் மெக்கடம்

32. மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கிய புத்துணர்வுடன் தொடர்பானது
1. A, B உண்மையற்றது 2. A, B உண்மையானது
3. A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது
4. A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது

33. கைத்தொழில் புரட்சியுடன் தொடர்பானது,
1. A, B உண்மையற்றது 2. A, B உண்மையானது
3. A உண்மையானது என்பதுடன் B உண்மையற்றது
4. A உண்மையற்றது என்பதுடன் B உண்மையானது

- பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் / பதங்களைக் கருத்தில் கொண்டு 34 - 36 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A - 1 மின் அடுப்பு
2 புகையிரத என்ஜின்
B - 1 சுய தேவைப் பொருளாதாரம்
2 நவீன பொருளாதாரம்
C - 1 நிலக்கரிப்பாவனை
2 இரும்பை உருக்குதல்
D - 1 கடலோடி ஹென்றியின் அனுசரணை
2 போர்த்துக்கல் நாடுகாண் பயண நடவடிக்கை

34. முதலாவது இரண்டாவதின் செயற்பாட்டிற்கு ஏதுவாய் அமைவதைக் காட்டும் கூற்று/பதச் சோடி யாது?
1. A 2. B 3. C 4. D

35. முதலாவதிற்கும் இரண்டாவதிற்குமிடையே தொடர்பின்மையைக் காட்டும் கூற்று / பதச்சோடி
1. A 2. B 3. C 4. D

36. முதலாவதன் அனுசரணை காரணமாக இரண்டாவதின் வளர்ச்சிக்கு ஏதுவாய் அமைவதைக் காட்டும் கூற்று / பதச்சோடி
1. A 2. B 3. C 4. D

37. கைத்தொழில் புரட்சி இங்கிலாந்தில் ஏற்படுவதற்கான காரணி அல்லாதது பின்வருவனவற்றுள் எது?
1. செல்வந்தர்கள் முதலிடுவதற்கு முன்வந்தமை.
2. சனத்தொகை குறைவடைதல்.
3. நிலக்கரி, இரும்புருக்குப்படிவுகள் காணப்பட்டமை.
4. குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றிப் பரவலான முறையில் வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டமை.

38. கைத்தொழில் புரட்சி காரணமாக விவசாயத்துறையில் ஏற்ப்பட்ட மாற்றம் யாது?
1. கி.பி 1840ல் பெனீ தபால் சேவை ஆரம்பம்
2. கி.பி 1844ல் தந்திமுறை கண்டறிதல்
3. ரொபட் பெக்வெல் என்பவரால் செம்மறியாடுகள் இனப்பெருக்கம் தொடர்பிலான புதிய கண்டுபிடிப்பு
4. கி.பி 1895ல் வானலைகள் மூலம் செய்திப் பரிமாற்ற முறை கண்டுபிடிப்பு

39. 20ம் நூற்றாண்டு ஆரம்பப்பகுதியில் கைத்தொழில் துறையில் மிகப்பாரிய வளர்ச்சி கண்ட ஆசிய நாடுகளுள் ஒன்று பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க.
1. இந்தியா 2. ஜப்பான் 3. சீனா 4. இலங்கை

40. கைத்தொழில் புரட்சி காரணமாக பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றம் யாது?
1. ஆடம்பரப் பொருட்களின் பாவனை அதிகரித்ததன் காரணமாக சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தமை.
2. ஏழை பணக்கார வகுப்பினரின் தோற்றம்
3. முதலாளித்துவப் பொருளாதாரம் உலகெங்கும் வேகமாகப் பரவியமை
4. சமூக சீர்கேடுகள் தோற்றம் பெற்றமை

(40x2=80 புள்ளிகள்)



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
Provincial Department of Education - NWP
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

33 T II

පළමු වාර පරීක්ෂණය - 11 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 11 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 11 - 2018

சுட்டிலக்கம் ........................................ வரலாறு II நேரம் : 3 மணித்தியாலம்

- பகுதி i ல் முதலாம் வினா கட்டாயம்
- பகுதி ii ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி iii ல் ஒரு வினாவுக்கும் விடையளிக்க.
- எல்லாமாக மொத்தம் 5 வினாக்களுக்கு விடையளிக்க.

01. அ. i ல் பின்வரும் இலங்கைப்படத்தில் தரப்பட்டுள்ள இடங்கள் அனைத்தையும் ii ல் தரப்பட்டுள்ள அனைத்து இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

i. காலித்துறைமுகம், பண்டுவஸ்துவர, தோணிகல, ஹுருளுவாவி, கப்பரகந்தநதி, பாகியங்கல, நாகதீபம், சீகிரியா, கன்னொருவ,சொரபொரவாவி, ரைகம, மன்னார் (12 புள்ளி)

ii. கோவா, புளோரன்ஸ் நகரம், ஜப்பான் தீவு, பத்தேவியா, சிந்து நதி, போர்த்துக்கல் (6 புள்ளி)

ஆ. i. பின்வரும் A, B, C, D ஆகியவற்றில் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களுக்குரிய விடைகளை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A - இபுன் பதூதாவின் தேச சஞ்சார அறிக்கை எந்நாட்டு இலக்கிய மூலாதாரமாகும்?
B - வெள்ளரச மரக்கிளையை இலங்கைக்குச் கொண்டுவரும் போது இந்நாட்டை ஆட்சி செய்த மன்னன் யார்?
C - 1764 ஆம் ஆண்டில் ஜேம்ஸ் ஹாகிரீவ்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரம் யாது?
D- 1815ம் ஆண்டு மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற ரொபட் பிரவுண்றிக்கு துணையாக நின்ற தந்திரமான கொள்கை கொண்ட அரச உத்தியோகத்தர் யார்? (4 புள்ளி)

A, B எனும் உருக்களைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

ii. 1. உரு Aயினால் காட்டப்படுள்ள நபர் யார்?
2. அவர் ஆட்சி செய்த நாடு எது?
3. இவரை அழைக்கப்பயன்படுத்திய விசேட நாமம் என்ன?
4. இவர் 1794 ஆம் ஆண்டு நாட்டை விட்டு தப்பியோடு அடைக்கலம் பெற்ற நாடு எது? (4 புள்ளி)



உரு A

iii. 1. உரு B யில் காட்டப்பட்டுள்ளது யாது?
2. இது எக்காலத்துக்குரியது?
3. இது எம்மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?
4. இதனை எதற்காகப் பயன்படுத்தினர்? (4 புள்ளி)



உரு B

## பகுதி II

2. i. வரலாற்றுக்கு முற்பட்ட கால தாழ்நில ஈர வலயத்துக்குரிய கற்குகைகள் மூன்று குறிப்பிடுக.

ii. வரலாற்றுக்காலத்துக்குரிய தொழில் ரீதியாக ஒன்று பட்டு வாழ்ந்த சில குடியிருப்புக்கள் பின்வருமாறு A, B, C, D எனத் தரப்பட்டுள்ளன. அவற்றைக் கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு ஒழுங்கு முறையாக எழுதுக.

A - குயவர்கள் வாழ்ந்த கிராமம
B - விவசாயிகள் வாழ்ந்த கிராமம்
C - இடையர்கள் வாழ்ந்த கிராமம்
D - தச்சர்கள் வாழ்ந்த கிராமம் (4 புள்ளி)

iii. முன்வரலாற்றுக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளில் தொழிநுட்பத்தைப் பயன்படுத்திய விதம் பற்றி இரண்டு காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

iv. a) வரலாற்றுக்காலம் என்பது எக்காலகட்டத்துக்குரியது?
b) வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.



kalvi.lk

3. i. பின்வரும் ABC என்பவற்றால் குறிப்பிடப்பட்டிருப்பது அரசியல் பலம் மத்தியப் படுத்தப்பட்ட பின்னர் காணப்பட்ட நிர்வாக அதிகாரிகளாவர் இவர்களின் பதவிப் பெயர்களை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A - உணவுச்சாலை அதிகாரி

B - வழக்கங்கள் மரபு முறைகள் தொடர்பான அதகாரி

C - காசு அச்சிடும் பிரிவின் தலைவர் (3 புள்ளி)

ii. பின்வரும் A,B,C,D யினால் அரசுபற்றிய பல்வேறு கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்ணக்சுருக்களுக்கு உரிய மன்னர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக

A - ஆண்டவன்

B - போதிசத்துவர்

C - மலையின் அரசன்

D - சக்கரவர்த்தி (4 புள்ளி)

iii. துட்டகைமுனு மன்னன் இராஜதந்திர உறவுகளைப் பேணியதுடன் மக்களின் நலனோம்பு நடவடிக்கைகளிலும் ஈடுப்பட்டான் என்பதற்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

iv. a) நிஸங்கமல்ல மன்னன் ஆட்சிக்காலத்தில் சேனைப்பயிர்ச் செய்கைக்காக அறவிட்ட வரிகள் இரண்டு நீக்கப்பட்டன. அவ் வரிகள் இரண்டும் எவை? (2 புள்ளி)

b) புராதன காலத்தில் சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொண்ட விதத்தினை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளி)

4. i. பின்வரும் A,B,C என்பவற்றில் சில மன்னனர்களின் செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குரிய மன்னர்களை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையை மறித்து எலகரக் கால்வாய் நிர்மாணித்தல்

B தெதிகம (புங்ககாம) எனும் கிராமத்தில் சூத்திகர சைத்திய விகாரையை நிர்மாணித்த இடத்தில் பிறந்ததாகக் குறிப்பிடும் மன்னன் யார்?

C புராதன வீதிகளில் கவ்வையிலிருந்து கவ்வைக்கு சுற்றூண்களை நடுமாறு ஆணையிட்ட மன்னன் யார்? (3 புள்ளி)

ii. பின்வரும் A, B, C, D என்பவற்றில் தரப்பட்டுள்ள விடயங்கள் எமது முன்னோர்களின் பராம்பரிய அளவீட்டு முறைகளாகும். இவற்றுக்குரிய தனிச்சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக. (4 புள்ளி)
(வீஹ, அமுண, பல, தத, ஹவ, ஹவஜர, முகூர்த்தம், பரமாணு, வியத்த)

iii. வரலாற்றுக்காலத்தில் சட்டம் நிலவிய விதம், அது தொடர்பான நிறுவனமும் அதிகாரிகளின் பணியும் பற்றி இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (5 புள்ளி)

iv. புராதன இலங்கையின் பெண்களை உயர்வாகக்கருதினர் என்பதற்கான காரணிகள் மூன்றினை உதாரணங்களினூடாக விளக்குக? (6 புள்ளி)

5. i. கண்டி இராச்சியத்திக்கு குறிப்பிடப்பட்ட வேறு பெயர்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii. பின்வரும் தகவல்களுக்குரிய நபர்களைக் குறிப்பிடுக.

A கண்டி இராச்சியத்தை அண்டியுள்ள பிரதேசங்களை ஒன்றுபடுத்தி, அரசொன்றை உருவாக்கிய மன்னன்

B சீதாவக்கையின் இராஜசிங்க மன்னன் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தபோது அங்கு ஆட்சி செய்த மன்னன யார்?

C கி.பி 1594 ம் ஆண்டு தந்துரே போரில் போர்த்துக்கேயரை படுதோல்வியடையச் செய்த மன்னன்

D ரன்தெனிவல போரில் போர்த்துக்கேய படைக்குத்தலைமை தாங்கிய தளபதி யார்? (4 புள்ளி)

iii. 1ம் விமலதர்ம சூரிய மன்னன்னின் ஆட்சிக் காலத்தில் பௌத்த சமயத்தை எழுச்சி பெறச் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக (5 புள்ளி)

iv. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பு பற்றி மூன்று காரணிகளைக் கொண்டு விபரிக்க. (6 புள்ளி)

6. i. பின்வரும் சந்தர்ப்பங்களுக்குரிய நபர்களை a,b,c என்ற ஒழுங்கில் எழுதுக.

A 1762 இல் கண்டி இராச்சிய மன்னனைச் சந்திந்த ஆங்கிலேயத் தூதுவன்.

B 1795 இல் கியு கடிதத்திற்கு ஏற்ப செயற்படுத்துவதற்கு மறுப்புத் தெரிவித்த ஒல்லாந்து ஆளுநர்.

C 1848 இல் புதிய வரிகள் பல அறிமுகப்படுத்திய ஆங்கில ஆளுநர் (3 புள்ளி)



kalvi.lk

ii. ஆங்கிலேயர் இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தில் கவனம் செலுத்தியமைக்கான காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

iii. 1803 ல் பிரடரிக்நோர்த் ஆளுநரின் மலையக ஆக்கிரமிப்பு தோல்வியில் முடிவடைந்தமைக்கான காரணிகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

iv. 1818ம் ஆண்டு ஏற்பட்ட சுதந்திரப் போராட்டத்திற்கு ஏதுவான காரணிகள் மூன்றினை விளக்குக. (6 புள்ளி)

7. i. ஐரோப்பிய இனத்தவர்களின் கீழைத்தேய வர்த்தக நிலையங்கள் காணப்பட்ட பிரதேசங்களை A, B, C எனும் ஒழுங்கில் குறிப்பிடுக.
A - போர்த்துக்கேயரின் நிர்வாக நிலையம்
B - ஒல்லாந்தரின் நிர்வாக நிலையம்
C - ஆங்கிலேயரின் நிர்வாக நிலையம் (3 புள்ளி)

ii. மியுரன் குழுவினரின் முன்வைத்த காரணிகள் 4 னைக் குறிப்படுக. (4 புள்ளி)

iii. ஆங்கிலேயர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணிகள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

iv. a) 1848 கிளர்ச்சிக்கு தலைமை தாங்கியவர்கள் இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
b) 1848 கிளர்ச்சியின் விளைவுகள் இரண்டிணை விளக்குக. (4 புள்ளி)

## பகுதி III

8. i. மறுமலர்ச்சிக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்பாளர்களை A,B,C எனும் ஒழுங்கில் தருக
A - அச்சு இயந்திரம்
B - மேற்கிந்திய தீவு
C - மனித உடலின் குருதிச்சுற்றோட்டத் தொகுதி (3 புள்ளி)

ii. மறுமலர்ச்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

iii. மறுமலர்ச்சிக்காலத்தில் ஐரோப்பாவில் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)

iv. மறுமலர்ச்சி காரணமாக எமது நாட்டில் அரசியல், பொருளாதார, சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

9. i. கைத்தொழில் புரட்சி முதலில் பரவிச் சென்ற நாடுகள் மூன்று குறிப்பிடுக. (3 புள்ளி)

ii. கைத்தொழில் புரட்சி காரணமாக A நெசவுக்கைத்தொழில், B நிலக்கரி கைத்தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட புதிய கண்டு பிடிப்புகள் இரண்டு வீதம் தருக? (4 புள்ளி)

iii. கைத்தொழில் புரட்சி காரணமாக அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

iv. கைத்தொழில் புரட்சியானது இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தின. அவ்வாறான காரணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

* * *



kalvi.lk

**முதலாம் தவணைப் பரீட்சை - 2018**
**வரலாறு - தரம் 11**
**விடைப்பத்திரம்**
**பகுதி I**

| | | | |
|---|---|---|---|
| 1 - 4 | 11 - 3 | 21 - 1 | 31 - 2 |
| 2 - 3 | 12 - 4 | 22 - 1 | 32 - 3 |
| 3 - 3 | 13 - 2 | 23 - 1 | 33 - 4 |
| 4 - 3 | 14 - 1 | 24 - 4 | 34 - 3 |
| 5 - 4 | 15 - 2 | 25 - 4 | 35 - 1 |
| 6 - 2 | 16 - 3 | 26 - 3 | 36 - 4 |
| 7 - 1 | 17 - 3 | 27 - 2 | 37 - 2 |
| 8 - 2 | 18 - 2 | 28 - 2 | 38 - 3 |
| 9 - 1 | 19 - 4 | 29 - 1 | 39 - 2 |
| 10 - 4 | 20 - 3 | 30 - 4 | 40 - 3 |

**பகுதி II**

1 (அ) i. ii புற உருவப்படங்கள் குறிக்கப்பட்டுள்ளன.
(ஆ) i. A - அரேபிய மூலாதாரம் B - தேவநம்பிய திஸ்ஸ மன்னன்
C - ஜெனி இயந்திரம் D - ஜோன் டொயிலி
ii. 1. 5ம் வில்லியம் 2. ஒல்லாந்து/ நெதர்லாந்து
3. ஸ்டெத் ஹோல்டர் 4. பிரித்தானியாவுக்கு
iii. 1. உடரஞ்சாமடம் மயானம் 2. சப்ரகமுவ மாகாணம்
3. முன்வரலாற்றுக்காலம் 4. சடலம் அடக்கம் செய்ய

2. i. பாகியங்கல குகை, கிதுல்கல பெலிலேன குகை, பட்டநொம்பலேன குகை
ii. A - கும்பகார காம B - கசீகாரகாம
C - கோபாலகாம D - வட்டகீகாம
iii. மட்பாண்டத்தயாரிப்பு, உலோக உற்பத்தி, வீடமைப்புத்தொழிநுட்பம், ஆபரணம் செய்யும் தொழில் மயானம் உருவாக்கும்
iv. a) கி.மு 450 - கி.பி 300 வரை
b) வருடாந்த மழைவீழ்ச்சி, மண்ணின் தன்மை, தரைதோற்ற அமைப்பு, இயற்கைவளம்

3. i. A - பதகு B - கொதுறுகேனா C - ரூப, அதெக
ii. A - மகாசேன மன்னன் B - குட்டகர்ண அபய மன்னன்
C - 1ம் காசியப்ப மன்னன் D - நிஸங்கமல்ல மன்னன்
iii. இராஜதந்திர உறவு, இந்நாட்டின் வரலாற்றில் முதலாவது முறையான யுத்த மேம்பாட்டிற்கு தலைமைத்துவ வழங்கியமை, தோல்வியடைந்த தனது எதிராளியின் கல்லறைக்கு உரிய மரியாதை செலுத்துதல், மக்கள் நலனோம்பு விடயம், ருவன்வெலிசாயா கட்டபட்ட வேளையில் அதன் நாற்றிசை வாயில்களிலும், தானமளிக்க ஏற்பாடு செய்தல் அனைவருக்கும் சம்பளம் வழங்குதல்.
iv. a) கெதி அட, கெடுகனத
b) காடொன்றைத் தெரிவு செய்தல், அதனை வெட்டி தீயிடல், மட்டப்படுத்தி தானியம் நடல், நவதெனி சேனை விஸ்தரிக்கப்பட்டிருக்கும்.

4. i. A - வசப மன்னன் B - 1ம் பராக்கிரமபாகு
C - நிஸ்ஸங்கமல்ல மன்னன்
ii. A - அமுண B - பரமாணு C - வீஹ D - ஹவஜர
iii. நிறுவனம் - வதால, சபாவ போன்றன விளக்கப்பட்டிருத்தல் வதால
நாட்டுக்குத்தேவையான சட்டங்கள் இவற்றும்
அதிகாரிகள் பெய்காப்பாளர், தண்ட நாயக்க போன்றவர்கள் பற்றி விளக்கம்
iv. பெண்களுக்கு அரச பதவி வழங்குதல், பெண்களை மரியாதைக்குட்படுத்தல்
மதுபாசிகா எனும் பெயரில் பெயர் நாமம் சூட்டுதல், பிரதேச நிர்வாகியாகச் செயற்படல்

5. i. மலையக இராசதானி, மலைநாடு, செங்கடகல, கண்டி.
ii. A - சேனாசம்பத் விக்ரமபாகு B - கரலியத்த பண்டார
C - 1ம் விமலதர்ம சூரிய மன்னன் D - கொன்ஸ்தைந்தீனு த சா



kalvi.lk

iii. • தெல்கம் விகாரையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்தாதுவை தலதாமாளிகையில் வைத்து பிரஷ்டித்தல்,
- பர்மாவிலிருந்து பிக்குமார்களை அழைத்து உபசம்பதா சடங்கினை நடத்துதல்
- புராதன விகாரைகளை புனர்நிர்மாணம் செய்தல்
- சமூகம் குலத்தை அடிப்படையாகக் கொண்டது
- கிராமிய சமூகம்
- தீக, பின்ன, ஒரே வீட்டில் சாப்பிடுதல்
- அசுத்தம் முறை

6. i. A - ஜோன் பைபஸ் B - பென் எங்கல்பெக் C - டொரிங்டன்

ii. திருகோணமலைத் துறைமுகம் இயற்கையானது, திருகோணமலைத் துறைமுகம் பருவக்காற்றுக் காலங்களில் பாதுகாப்பானது, ஆங்கிலேயரின் கடற்படையை பாதுகாக்க முடிவது.

iii. • முத்துச்சாமிக்கு மலையக மக்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை
- மழைவீழ்ச்சி ஆரம்பகாலத்தில் தொற்று நோய்கள் ஏற்பட்டமை
- மலையக கொரில்லாப் போர் முறை
- மன்னனொன்று இழக்கப்பட்டமை
- ஆங்கில ஆட்சியாளர்களை வெறுத்தமை
- 1815ம் ஆண்டு ஒப்பந்தம் மீறப்பட்டமை

7. i. A - கோவா B - பத்தேவியா C - சென்னை

ii. • உள்நாட்டு அலுவலர்கள் நியமிக்கப்படல்
- பல புதிய வரிகளை நீக்குதல்
- முடிக்குரிய ஆட்சியை பெற்றுக்கொடுத்தல்

iii. நாட்டினுள் சுயாதீன இராச்சியம் காணப்பட்டது இடைஞ்சலாகும், கடவைகளில் வரி அறவிடுதல், பாதுகாப்பு செலவு அதிகரித்தல், கொழும்பு - திருகோணமலை பிரதான பாதைகளில் தடைகள் ஏற்படல்

iv. a) வீரபுரன் அப்பு கொங்கோலேகொட பண்டா, ஹங்குரங்கெத்த டிங்கிரால குடாபொல

b) குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குதல், உடமைகளை அரசுடைமையாக்குதல் பல வரிகளை நீக்குதல், விவசாயம், நீர்ப்பாசனம் விருத்தி

8. i. A - ஜொஹர்னஸ் கெடன்பர்க் B - கிரிஸ்டோபர் கொலம்பஸ்
C - வில்லியம் ஹார்வே

ii. வர்த்தக வளர்ச்சி,முதலாளிகள் உருவாக்கம், கொன்ஸ்தாந்து நோபில் துருக்கியர் வசமாதல் அறிவு வளர்ச்சி, புதிய கடல்மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டமை காரணமாக வர்த்தக மார்க்கம் விருத்தியமைதல், பணப்புழக்கம் அதிகரித்தல், வர்த்தக பொருளாதாரமுறை விருத்தி பணக்கார மத்திய தர வர்க்கத்தினர் தோற்றம்

iv. அரசியல் :- பாராளுமன்ற முறை தோற்றம்
புதிய நீதிமன்ற தோற்றம்
பொருளாதாரம் :- வர்த்தகப் பொருளாதாரம் தோற்றம்
பணக்கார மத்திய வர்க்கத்தினர் தோற்றம்
சமூகம் :- ஐரோப்பிய வளர்ச்சி
மேற்கத்திய கல்வி முறை

9. i. பிரான்ஸ் ஸ்பெயின், போர்த்துக்கல்

ii. பிடவைக்கைத்தொழில் :- ஜெனி இயந்திரம்
மியுல் இயந்திரம்
பறக்கும் நூனாழி
நிலக்கரிக்கைத்தொழில் :- நீராவி இயந்திரம்
பாதுகாப்பு விளக்கம்

iii. பணக்கார ஏழை வேறுபாடு தோற்றம்
பல்வேறு அரசியல் கொள்கைகள் தோற்றம்
குடியேற்றவாதக் கொள்கை
தொழிலாளர்கள் வேலைநிறுத்தல்

iv. விவசாயப் பண்ணைகள் தோற்றம் பெறல்
கைத்தொழில் ஆரம்பம், உபகரணப்பாவனை
தோட்ட உரிமையாளர்கள் முதலாளிகளாகுதல்
கூலிக்கு வேலை செய்யும் வர்க்கத்தினர் தேற்றம்



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457